# மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து வாக்கு சேகரிப்பு!



தேனி வடக்கு மாவட்டம் போடி சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வத்துக்கு ஆதரவாக உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரிக்கும் போது தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு தேனி வடக்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் அருள் வாசகன். வேல் கொடுத்து வரவேற்றார்



மதுரை மாவட்டம் வாடிப்பட்டியில் நடைபெற்ற பிரச்சார கூட்டத்தில் கழக மாநில துணை பொதுச்செயலாளர் திருச்சி என்.சிவா எம்.பி., அவர்கள் சோழவந்தான் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் மாவட்ட துணை செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ.வை ஆதரித்து உதய சூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். உடன் பேரூர் செயலாளர்கள் பால்பாண்டியன், சத்திய பிரகாஷ், ஒன்றிய செயலாளர்கள் பால ராஜேந்திரன், பசும்பொன்மாறன், கோகுல், கழக நிர்வாகிகள் ஜெயராமன், கிருஷ்ண வேணி, மு.பா.பிரகாஷ், வழக்கறிஞர் கார்த்திக், தியாக முத்துப் பாண்டி, திரவியம், ஜெயகாந்தன் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், கூட்டணி கட்சி நிர்வாகிகள், ஆயிரக்கணக்கான பொது மக்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்




விருதுநகர் மாவட்டம் திருச்சுழி தி.மு.க. வேட்பாளர் தங்கம் தென்னரசை ஆதரித்து பாராளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கப்பாண்டியன் திருச்சுழி பகுதிகளில் பிரச்சாரம் செய்தார்.



சிவகங்கை மாவட்டம் காளையார்கோவிலில் சிவகங்கை சட்டமன்ற தொகுதி வேட்பாளர் நடிகர் கருணாஸை ஆதரித்து சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வாக்கு சேகரித்து பேசினார். உடன் வேட்பாளர் நடிகர் கருணாஸ் காளையார் கோவில் கிழக்கு ஒன்றிய செயலாளர் வே.ஆரோக்கியசாமி ஆகியோர் உள்ளனர்.



நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கழக வெற்றி வேட்பாளர் மு. அப்துல்வஹாப் எம்.எல்.ஏ. 29 வார்டு குறுக்குத் துறையில் பிரச்சாரத்தை துவங்கி 29,30, 12,38,37 ஆகிய வார்டு பகுதிகளில் வீதி வீதியாக சென்று பொது மக்களை சந்தித்து திராவிட மாடல் அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி உதய சூரியன் சின்னத்திற்கு தீவிரமாக வாக்கு சேகரித்தார்.அங்கு கூடயிருந்த பெண்கள் அனைவரும் தங்களது ஆதரவுகளை முழுமனதுடன் தெரிவித்தனர். நிகழ்வில் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை மேலப்பாளையத்தில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாபெரும் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டம் ம.தி.மு.க. மாநகர செயலாளர் கே.எம்.நிஜாம் தலைமையில் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் கழக வேட்பாளர் மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வைகோ பங்கேற்று கழக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி அப்துல் வகாப்க்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து அமோக வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.நிகழ்வில் தினேஷ், ராஜ், விஜிலா சத்யானந்த்,ரசூல் மைதீன், துபாய் சாகுல், தச்சை சுப்பிரமணியன் உட்பட கழக நிர்வாகிகள்,கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



அருப்புக்கோட்டை தொகுதிக்குட்பட்ட நள்ளி, குமராபுரம், கஞ்சம்பட்டி, கலிங்கப்பட்டி, தோட்டிலோவன்பட்டி வடக்கு, தோட்டிலோவன்பட்டி, சிவனைந்தபுரம், மீனாட்சிபுரம் உள்ளிட்ட பகுதிகளில் மக்களைச் சந்தித்து திமுக வேட்பாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் வாக்குகளை சேகரித்தார். உடன் முன்னாள் சேர்மன் சிவப்பிரகாசம், சுப்புராஜ், நகரச் செயலாளர் ஏ.கே.மணி, நகர் மன்றத் துணைத் தலைவர் பழனிச்சாமி, நகர் மன்றத் தலைவர் சுந்தரலட்சுமி, மாவட்டப் பொருளாளர் சாகுல் ஹமீது, இளைஞர் அணி துணை அமைப்பாளர் பாபுஜி, வழக்கறிஞர் விஜயகுமார், மாவட்ட தி.மு.க. பொருளாளர் கே.வி.கே.பிராபகரன் ஆகியோர் இருந்தனர்.



நெல்லை மாவட்டம் இராதாபுரம் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கழக வெற்றி வேட்பாளர் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தெற்கு கள்ளிகுளம் கிராமத்தில் கழக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் ஜெகதீஸ்,ஜோசப் பெல்சி உள்பட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி காங்கிரஸ் கட்சி வேட்பாளர் வி.பி.துரையை ஆதரித்து பத்தமடை பகுதியில் அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் பிரச்சாரம் மேற்கொண்டு கழக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி கை சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன்,ம.ம.க. மாவட்ட தலைவர் ரசூல் மைதீன், பத்தமடை தலைவர் வலுக்காலி உள்பட கழக நிர்வாகிகள்,கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



தென்காசி மாவட்டம் தென்காசி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கழக வெற்றி வேட்பாளர் மரு.கலை கதிரவன் தென்காசி நகரில் காளிதாசன் நகரில் பிரச்சாரத்தை துவக்கி டி.என்.எச்.பி. காலனி,மங்கம்மாள் சாலை, களக்கோடி தெரு,எல்.ஆர்.எஸ். பாளையம்,தைக்காத் தெரு, கூளைக்கடை பஜார் உள்பட 21 தெருக்களுக்கு சென்று கொளுத்தும் வெயிலில் வாக்கு சேகரிக்கும் பணியில் ஈடுபட்டார்.தினசரி காய்கறி மார்க்கெட் சந்தையில் வியாபாரம் செய்யும் பெண்களிடம் கழக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.உடன் நகர பொறுப்பாளர் சாதிர் உள்பட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் உள்ளனர்.